# SEC 4 / 5 HOW TO GET FULL SCORE IN TAMIL ORAL - REVISION GUIDE
# உயர்நிலை 4 / 5 வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல்

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி | 1 - 3 |
| 1 | இயங்கலை வகுப்பு (Home-Based Learning) | 4 - 10 |
| 2 | பகுதிநேர வேலை (Part-Time Job) | 11 - 17 |
| 3 | ஆடம்பர வாழ்க்கைமுறை (Luxurious Lifestyle) | 18 - 24 |
| 4 | வாழ்நாள் கல்வி (Lifelong Learning) | 25 - 32 |
| 5 | கேளிக்கை நிகழ்வுகள் (Entertainment Events) | 33 - 39 |
| 6 | விளையாட்டுத் துறைக்குப் பள்ளி கொடுக்கும் முக்கியத்துவம் (Importance given by School to Sports) | 40 - 46 |
| 7 | மாணவர் பரிமாற்றத் திட்டம் (Student Exchange Programme) | 47 - 53 |
| 8 | சமூக மன்றங்கள் (Community Centres) | 54 - 60 |
| 9 | உணவுகளின் சொர்க்கம் சிங்கப்பூர் (Singapore - Food Paradise) | 61 - 67 |
| 10 | பணிப்பெண்கள் (Domestic Helpers) | 68 - 74 |
| 11 | தேசிய தினக் கொண்டாட்டம் (National Day Celebration) | 75 - 81 |
| 12 | தொழிற்கல்வி (Technical Education) | 82 - 88 |
| 13 | நேரத் திட்டமிடல் (Time Management) | 89 - 95 |
| 14 | மருத்துவச் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு (Awareness about Medical Services) | 96 - 102 |
| 15 | வெளிநாட்டிற்குச் சென்று படித்தல் (Studying Abroad) | 103 - 110 |
| | விடைத்தாள்கள் | 111 - 125 |

# 1. இயங்கலை வகுப்பு (Home-Based Learning)

## சொல்வளம்

| | | |
|---|---|---|
| 1. | இணையவழிக் கல்வி | Online Education |
| 2. | தொழில்நுட்பம் | Technology |
| 3. | தகவல் பரிமாற்றம் | Exchange of Information |
| 4. | மென்பொருள் | Software |
| 5. | காணொளி | Video |
| 6. | வழிகாட்டல் | Guidance |
| 7. | ஐயம் | Doubt |
| 8. | திறன்பேசி | Smartphone |
| 9. | தலைமைத்துவம் | Leadership |
| 10. | அணுகுமுறை | Approach |
| 11. | பதிவேற்றம் | Upload |
| 12. | பதிவிறக்கம் | Download |
| 13. | நட்புறவு | Friendliness |
| 14. | கற்றல் கற்பித்தல் | Learning and Teaching |
| 15. | கவனச்சிதறல் | Distraction |

WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG



## <u>கேள்விகள்</u>

**1. இன்றைய சூழலில் ஆசிரியர்கள் இயங்கலை வகுப்புகளின் வழி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். உங்களுக்கு இயங்கலை வகுப்பில் கலந்து கொண்ட அனுபவம் உண்டா?**

> மேற்கண்ட கேள்வியில் இயங்கலை வகுப்பில் கலந்து கொண்ட அனுபவம் பற்றிக் கேட்கப்பட்டுள்ளதால் - **சொந்தக் கருத்து, சொந்த அனுபவத்தைக்** கொண்டு கருத்துகளைக் கூற வேண்டும்.

| **Evidences / ஆதாரங்கள்** | உண்டு. |
|---|---|
| **What? Why? How?** | • கொவிட்-19 சூழலால் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல முடியாத தருணத்தில், ஆசிரியர்கள் இயங்கலை வகுப்புகளை நடத்தினார்கள்.<br>• நான் வீட்டில் இருந்து கொண்டே திறன்பேசி அல்லது மடிக்கணினியின் வாயிலாக 1. ______________________ வகுப்பில் பங்கெடுத்தேன்.<br>• வகுப்பு ஆரம்பிக்கும் 2. ______________________ முன்னரே தெரிவிக்கப்படுவதால், நான் குறிப்பிட்ட நேரத்தில் வகுப்பில் இணைந்து விடுவேன்.<br>• என் நண்பர்களும் இணையம் வாயிலாக வகுப்பில் பங்கெடுப்பார்கள்.<br>• ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைக் கவனித்துக் குறிப்பெடுத்துக் (Take Notes) கொள்வேன். |
| **Consequences / விளைவுகள்** | |
| **இயங்கலை வகுப்பில் பங்கேற்றால் / Advantages** | • வீட்டிலிருந்து இணையம்வழிக் கற்பதால், பள்ளிக்குச் செல்வதற்காக அதிகாலையில் எழுவது, வாகன நெரிசலில் (Traffic Jam) சிக்குவது போன்ற அலைச்சல்களைத் தவிர்க்க 3. ______________________.<br>• பாடக்குறிப்புகள் (Study Material) எங்களுக்கு முன்கூட்டியே வழங்கப்படுவதால், தயார் நிலையில் இருக்கலாம்.<br>• பாடத்திற்குத் தேவையான கூடுதல் தகவல்களையும் பயிற்சிகளையும் 4. ______________________ தேடலாம்.<br>• ஆசிரியர் போதிக்கும் காணொளியைப் பலமுறை பார்த்து, பாடம் குறித்த புரிதலை (Understanding) மேம்படுத்தி (Improve) 5. ______________________.<br>• தொழில்நுட்பத்தைக் கையாள்வதால் (Handle) புதிய சிந்தனைகள், யோசனைகள் உதிக்கும்.<br>• தேர்வில் 6. ______________________ மதிப்பெண்களைப் பெறுவதற்கு இயங்கலை வகுப்புகள் பயனுள்ளதாக அமையும். |

| இயங்கலை வகுப்பில் பங்கேற்காவிட்டால் / Disadvantages | • மாணவர்கள் தொழில்நுட்பப் பயன்பாட்டிலும் கல்வியிலும் பின்தங்கி (Lag Behind) விடலாம்.<br>• பாடத்திருப்பம் (Revision) செய்யாததால் இதுவரை படித்ததை 7. ___________________ போகலாம்.<br>• நேரத்தைப் பயனற்ற வழியில் செலவிட வாய்ப்பு உண்டு.<br>• கல்வியில் நாட்டம் (Interest) 8. ____________________.<br>• வீட்டிலிருந்து இயங்கலை வகுப்பில் பங்கேற்கும்போது கவனச்சிதறல் (Distraction) ஏற்படும்.<br>• நேரப் பற்றாக்குறை காரணமாக இயங்கலை வகுப்பில் கலந்துரையாடல் (Interaction) குறைவாக இருக்கும். |
|---|---|

| **Solutions / Suggestions - How?**<br>**தீர்வுகள் / ஆலோசனைகள் - எவ்வாறு?** |
|---|
| • கல்வி வளர்ச்சியில் இயங்கலை வகுப்பும் இடம் பிடித்துள்ளதால், நாம் பின்தங்கிவிடாமல் இருக்க அதனை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.<br>• இயங்கலை வகுப்பு மாணவர்களின் நலனுக்காகவே நடத்தப்படுகின்றது.<br>• மாணவர்கள் நேரத்தை விரயம் செய்யாமல் கட்டொழுங்குடன் இருக்க இயங்கலை வகுப்பு உதவும்.<br>• இயங்கலை வகுப்பின் குறைபாடுகளை (Defects) மாணவர்கள் உடனுக்குடன் ஆசிரியரிடம் தெரிவித்தால் அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்கும். |

(இருவழிக் கலந்துரையாடலுக்கான வினாக்கள் மாணவர்கள் பேசுவதிலிருந்து கேட்கப்படும்).

2. **இயங்கலை வகுப்பு** குறிப்பிட்ட நேரம் மட்டுமே நடைபெறுவதால் **கலந்துரையாடல்கள் அதிகம் நிகழ்வதில்லை** என்றுக் கூறினீர்கள். இதனால் **என்னென்ன சிக்கல்கள் ஏற்படும்?**

| மேற்கண்ட கேள்விக்கு **இயங்கலை வகுப்பில்** குறைவான **கலந்துரையாடல் நிகழ்வதால் ஏற்படும் சிக்கல்களைப்** பற்றிக் கூற வேண்டும். |
|---|

| **இயங்கலை வகுப்பில் குறைவான கலந்துரையாடல் நிகழ்வதால் ஏற்படும் சிக்கல்கள்** | |
|---|---|
| **செயல்கள் / Actions** | • நேரடி வகுப்பில் (Physical Class) நிகழும் கலந்துரையாடல்கள் இயங்கலை 9. ____________________ நடைபெறுவதில்லை.<br>• ஆசிரியர் போதிக்கும்போது எழும் ஐயங்களை (Doubts) உடனடியாக 10. ___________________ இயலாது.<br>• குழு உரையாடல், குழு நடவடிக்கை நடைபெறுவதில்லை.<br>• ஆசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் குறிப்பிட்ட நேரம் மட்டுமே உரையாடுவார்.<br>• கலந்துரையாடல் இன்றி மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டு இதர கேளிக்கைகளால் (Entertainment) ஈர்க்கப்படுகிறார்கள்.<br>• ஆசிரியரால் மாணவரின் கல்வி முன்னேற்றத்தை மட்டுமே கவனிக்க இயலும். மாணவரின் மனநிலை, உணர்வு, குறைபாடுகள் போன்றவற்றை 11. ______________________ முடியவில்லை. |

| | |
|---|---|
| **ஏன்? Why?** | • அனைத்துப் பாடங்களும் இயங்கலை வகுப்பு வாயிலாக நடைபெறுவதால், நேரப் பற்றாக்குறை ஏற்படுகிறது.<br>• கலந்துரையாடல் அதிகம் நிகழ்ந்தால் பாடத்திட்டத்தை முடிக்க இயலாது.<br>• மாணவர்களின் ஆரோக்கியம் (Health) கருதி குறிப்பிட்ட நேரம் மட்டுமே இயங்கலை வகுப்பு நடத்தப்படுகிறது.<br>• நண்பர்களுடன் கலந்துரையாட வாய்ப்பளித்தால் பாடத்தில் கவனம் 12. ____________________.<br>• ஆசிரியர் போதிக்கும்போது இடையூறுகளைத் (Disturbance) தவிர்க்க மாணவர்கள் வகுப்பின் இறுதியில் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்கள். |
| **என்ன செய்ய வேண்டும்?**<br><br>**What should be done?** | • மின்னஞ்சல் / திறன்பேசி வழி சிக்கல்களை ஆசிரியரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.<br>• மாணவர்கள் வகுப்பிற்குப் பின்னர் தங்கள் நண்பர்களுடன் பாடம் குறித்துக் கலந்துரையாடலாம்.<br>• பெற்றோர்கள் கல்வி கற்க உகந்த 13. ____________________ வீட்டில் ஏற்படுத்தித் தர வேண்டும்.<br>• மாணவர்களின் கவனம் சிதறாமல் இருக்க பெற்றோர் அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும்.<br>• புதிய பாடத்தைத் தொடங்குவதற்கு முன்பு, கடந்த வகுப்பில் மாணவர்களுக்கு எழுந்த ஐயத்தைத் தீர்த்து வைக்க வேண்டும். |

**3. இயங்கலை வகுப்பில் பிள்ளைகள் கலந்து கொள்ள பெற்றோர்கள் எவ்வாறு ஊக்குவிக்கின்றனர்?**

மேற்கண்ட கேள்வியில் இயங்கலை வகுப்பில் பிள்ளைகள் கலந்து கொள்ள பெற்றோர்கள் எவ்வாறு ஊக்குவிக்கின்றனர் என்று கேட்கப்பட்டுள்ளதால் - **பிள்ளைகளின் கல்வி நலனில் பெற்றோர்கள் கொண்டுள்ள அக்கறையைக் குறித்த** கருத்துகளைக் கூற வேண்டும்.

| **பதில் : பிள்ளைகள் இயங்கலை வகுப்பில் கலந்து கொள்ள பெற்றோர்கள் நன்கு ஊக்குவிக்கிறார்கள்.** | |
|---|---|
| **Evidences / ஆதாரங்கள்**<br><br>**Why? How?** | • பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் கல்விமான்களாக மிளிர (Shine) வேண்டும் என்று அக்கறை காட்டுகின்றனர்.<br>• இணையம், திறன்பேசி, கணினி, அச்சுப்பொறி (Printer), நாற்காலி, மேசை ஆகிய வசதிகளை வீட்டில் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தித் தருகிறார்கள்.<br>• இயங்கலை வகுப்பின் கால 14. ____________________ தயாரித்துக் கொடுக்கிறார்கள்.<br>• பிள்ளைகள் நேரம் தவறாமல் வகுப்பில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்துகிறார்கள்.<br>• 15. ____________________ தொடர்பு கொண்டு கூடுதல் |

| | |
|---|---|
| | பயிற்சி நூல்களைப் பிள்ளைகளுக்கு வாங்கித் தருகிறார்கள்.<br>• கூடுதல் பயிற்சிகளை அச்சிட்டு 16. ____________________.<br>• பிள்ளைகளின் கவனம் சிதறாமல் (Distract) இருக்க தொலைக்காட்சி, வானொலி பயன்பாட்டைத் தவிர்க்கிறார்கள்.<br>• இயங்கலை வகுப்பு முடியும் வரை பிள்ளைகளுடன் அமர்ந்து அவர்களின் தேவையைக் கவனித்துக் கொள்கிறார்கள்.<br>• பிள்ளைகளின் ஐயங்களுக்குப் பதிலளிக்கிறார்கள். |
| **Consequences / விளைவுகள்** | |
| **பெற்றோர்கள் ஊக்குவிப்பதால் / Advantages** | • பிள்ளைகள் ஆர்வத்துடன் இயங்கலை வகுப்பில் பங்கேற்பார்கள்.<br>• கல்வியில் நாட்டம் (Interest) 17. ____________________.<br>• தொழில்நுட்ப வளர்ச்சியிலும் கல்வியிலும் முன்னேற்றம் அடைகிறார்கள்.<br>• பிள்ளைகளின் நேர நிர்வாகம், சுய ஒழுக்கம் (Self-Dicipline) மேம்படும்.<br>• ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோருக்கு இடையிலான உறவு சிறப்பாக அமையும். |
| **பெற்றோர்கள் ஊக்குவிக்காவிடில் / Disadvantages** | • வகுப்புகளில் பிள்ளைகள் கலந்து கொள்ள மாட்டார்கள்.<br>• பிள்ளைகள் பாடப்புத்தகங்களை மட்டுமே படிப்பார்கள்.<br>• புதிய தொழில்நுட்பத்தை அறியாமல் போகக்கூடும்.<br>• கல்வியில் நாட்டம் குறையும்.<br>• பிள்ளைகள் நேரத்தை விரயம் செய்வார்கள்.<br>• புரியாத 18. ____________________ தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போகும்.<br>• புத்தகத்தில் உள்ள கருத்துகளைத் தவிர வேறு புதிய தகவல்களை அறிந்து கொள்ள முடியாது.<br>• கற்றதை மறக்கும் நிலை ஏற்படும்.<br>• புதியவற்றைக் கற்கும் நிலை தடைப்படும். |
| **Solutions / Suggestions - How?**<br>**தீர்வுகள் / ஆலோசனைகள் - எவ்வாறு?** | |
| • இக்காலத்தில் இயங்கலை வகுப்பு அவசியமானதாக அமைகின்றது.<br>• இயங்கலை வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதோடு தொழில்நுட்ப வளர்ச்சியை எவ்வாறு கையாள வேண்டும் என்றும் கற்றுக் கொடுக்கின்றது.<br>• பெற்றோரின் ஊக்குவிப்பு இருந்தால் நேரடிக் கல்விமுறைக்குப் (Direct Education) பழகிய மாணவர்கள் இயங்கலை வகுப்பின் சவால்களை எளிதாக எதிர்கொள்வார்கள்.<br>• பிள்ளைகள் வீட்டில் இருக்கும் நேரத்தை நல்ல முறையில் செலவிட இயங்கலை வகுப்பை ஒரு தேர்வாக பெற்றோர்கள் அறிமுகப்படுத்தலாம். | |

**இயங்கலை வகுப்பு தொடர்பான தகவல்கள்**

- மாணவர் கற்றல் தளம் (Student Learning Space)
- சிகரம் கல்வி நிலையம் (Sigaram Coaching Centre)
- கல்வி அமைச்சு (Ministry of Education)
- தேசிய கல்விக் கழகம் (National Institute of Education)
- கூகிள் வகுப்பறை (Google Meet Classroom)

**வாய்மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கான செய்யுள்களும் பொன்மொழிகளும்**

1. இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து. *(பழமொழி)*
2. கடை நிலத்தோ ராயினும் கற்றறிந்தோரைத்<br>தலை நிலத்து வைக்கப்படும். *(நாலடியார்)*
3. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குத்<br>கற்றனைத் தூறும் அறிவு. *(திருக்குறள்)*
4. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம். *(உலகநீதி)*
5. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி. *(கொன்றை வேந்தன்)*
6. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு<br>எழுமையும் ஏமாப் புடைத்து. *(திருக்குறள்)*
7. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு. *(கொன்றை வேந்தன்)*

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருள்களை, பட்டியலில் இருக்கும் செய்யுள்கள் மற்றும் பொன்மொழிகளோடு பொருத்தி அவற்றின் எண்களை எழுதுக.**

| | |
|---|---|
| விடாமுயற்சியோடு செயல்படுவது வாழ்க்கையை வளப்படுத்தும். | |
| படிக்காமல் ஒரு நாள் கூட இருக்கக் கூடாது. | |
| ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையது. | |
| சாதாரண மக்களாக இருந்தாலும் கற்றவர்களை உயர்ந்த இடத்தில் வைத்து இவ்வுலகம் போற்றும். | |
| ஒருவன் கையில் இருக்கும் பொருள் செல்வத்தை விட அவன் கற்ற கல்வியே உண்மையான செல்வம். | |
| இளமைக் காலத்தில் கற்கும் கல்வி, சிலை மேல் பொறிக்கப்பட்ட எழுத்துப் போல அழியாமல் மனதில் நிலைத்திருக்கும். | |
| தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். | |

## விடைத்தாள்

**1. இயங்கலை வகுப்பு**

| | | |
|---|---|---|
| 1. இயங்கலை | 7. மறந்து | 13. சூழலை |
| 2. நேரம் | 8. குறையும் | 14. அட்டவணையை |
| 3. முடியும் | 9. வகுப்பில் | 15. ஆசிரியரிடம் |
| 4. இணையத்தில் | 10. தெளிவுபெற | 16. தருகிறார்கள் |
| 5. கொள்ளலாம் | 11. உணர | 17. அதிகரிக்கும் |
| 6. சிறந்த | 12. சிதறும் | 18. பாடங்களை |

| | |
|---|---|
| விடாமுயற்சியோடு செயல்படுவது வாழ்க்கையை வளப்படுத்தும். | 7 |
| படிக்காமல் ஒரு நாள் கூட இருக்கக் கூடாது. | 4 |
| ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையது. | 6 |
| சாதாரண மக்களாக இருந்தாலும் கற்றவர்களை உயர்ந்த இடத்தில் வைத்து இவ்வுலகம் போற்றும். | 2 |
| ஒருவன் கையில் இருக்கும் பொருள் செல்வத்தை விட அவன் கற்ற கல்வியே உண்மையான செல்வம். | 5 |
| இளமைக் காலத்தில் கற்கும் கல்வி, சிலை மேல் பொறிக்கப்பட்ட எழுத்துப் போல அழியாமல் மனதில் நிலைத்திருக்கும். | 1 |
| தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். | 3 |